# சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

## இடர் முகாமைத்துவக் கால சுயகற்றல் செயலட்டை – 2021

## பாட இணைச் செயற்பாடு (தரம் - 05)

காலம்: 2021.05.17 – 2021.05.23

செயலட்டை இல - 03

தயாரிப்பு: C. ரூபி ஜசிந்தா
(ஆசிரியர் ஆலோசகர்)
தெஹியோவிற்ற வலயம்

- கீழ்வரும் பாடலுடன் தொடர்புடைய சித்திரங்களைச் சுயமாக வரைக.

### <u>கொண்டாட்டம்</u>

மாலையில் வந்து முகில்கள் கூட
வண்ண மயிலும் ஆடுது
அழகுதோகை விரித்து நின்றே
ஆனந்தமாய் ஆடுது.

கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது
கொப்புபக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது

வானம் பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது
வண்ணக் கிளியும் வந்தி ருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது